பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 06 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மத்தியப்பிரதேச மாநிலத்தில் சர்வதேச சிக்கிள்செல் நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

2. இந்தியா - ஃபிரான்ஸ் இடையிலான நட்புறவு வரும் காலத்தில் மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. ஐநா சபையில் பாகிஸ்தானும், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பும் ஜம்மு-கஷ்மீர் குறித்து முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

4. இந்தியா விளையாட்டுத் துறையில் உலகளாவிய சக்தியாக வேகமாக உருவெடுத்து வருவதாக மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்ஸே தெரிவித்துள்ளார்.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் கனடா 6-0 என்ற கோல் கணக்கில் கத்தார் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மத்தியப்பிரதேச மாநிலம் ஓம்காரேஷ்வரில் நடைபெறும் சர்வதேச சிக்கிள்செல் நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

அதனைத் தொடர்ந்து, அவர் ஒடிசா மாநிலம் ராய்ரங்பூருக்கு பயணம் மேற்கொள்கிறார்.

அங்கு அவர் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார். புவனேஷ்வரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை சார்பில் மருத்துவ முகாமையும் தொடங்கி வைத்து பேசுகிறார்.

சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கான பிரத்யேகக் குடிநீர் திட்டத்தையும் அவர் துவக்கி வைக்கிறார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் லடாக் யூனியன்பிரதேசத்தில் இன்று லடாக் செல்கிறார்.

நாளை மறுநாள் வரை மூன்று நாட்கள் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

நாளை, திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் லுகுங் கிராமத்திற்குச் செல்கிறார்.

அங்குள்ள சுயஉதவிக் குழுக்களுடன் அவர் கலந்துரையாடுவதுடன், எல்லைப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளையும் நேரில் பார்வையிட உள்ளார்.

இதனைத் தொடர்ந்து, நாட்டின் பாதுகாப்புக்காக உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், அங்கிருக்கும் போர் நினைவிடத்திற்குச் சென்று அவர் அஞ்சலி செலுத்துகிறார்.

வரும் ஞாயிற்றுக்கிழமை லே நகரில் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களில் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

இந்தியா - ஃபிரான்ஸ் இடையிலான நட்புறவு வரும் காலத்தில் மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியா புறப்படும் முன்பு சமூக வலைதளத்தில் தனது ஃபிரான்சில் நிறைவடைந்த தமது அரசுமுறைப் பயணம் குறித்து சில கருத்துகளை அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணம் ஆக்கப்பூர்வமான விவாதங்களுடன் நிறைவு பெற்றதாக கூறியுள்ளார்.

இந்திய வம்சாவளியினர் உடனான சந்திப்பு மற்றும் முன்னணி வர்த்தக நிறுவன தலைவர்களுடன் கலந்துரையாடியது மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃபிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், அந்நாட்டு அரசு மற்றும் மக்கள் அளித்த வரவேற்புக்கு தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று திரு. இமானுவேல் மேக்ரோனுடன் இணைந்து **Viva Tech** என்ற தொழில்நுட்பக் கண்காட்சி வளாகத்தை தாம் பார்வையிட்டதாகவும், அங்கு நிலவும் ஆற்றலும், உற்சாகமும் உண்மையில் வியக்க வைக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் பயணம் இந்தியா - ஃபிரான்ஸ் இடையிலான உலகளாவிய உத்திசார்ந்த கூட்டு செயல்பாடுகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

முக்கியமான துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இரு நாடுகளின் உறுதிப்பாட்டை பிரதமரின் பயணம் மேலும் வலுப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. மோடியின் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணம் என்றும், இது இரு நாடுகளுக்கிடையேயான உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அதிபர் திரு. மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஐநா சபையில் பாகிஸ்தானும், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பும் ஜம்மு-காஷ்மீர் குறித்து முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

ஐநா மனித உரிமைகள் கவுன்சிலின் 62-வது கூட்டத்தில், பேசிய ஐநா-விற்கான இந்திய தூதரகத்தின் முதல் செயலாளர் திருமதி அனுபமா சிங், ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒருங்கிணைந்த பகுதி என்றும், இந்தியாவிற்குச் சொந்தமானது என்றும் உறுதியாக கூறினார்.

உள்நாட்டுச் சிக்கல்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் தொடர்ந்து பயங்கரவாதத்திற்கு அளிக்கும் ஆதரவை மறைக்கவும் பாகிஸ்தான் இத்தகைய பிரச்சாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள இந்தியப் பகுதிகளை மீண்டும் ஒப்படைப்பது மட்டுமே தீர்க்கப்பட வேண்டிய ஒரே விவகாரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் சமீபகாலமாகப் போராட்டங்களும் கொந்தளிப்பும் அதிகரித்துள்ளதாக கூறிய அவர், ராவல்கோட்டில் அரங்கேறிய துயரம், அந்நாட்டின் அத்துமீறிய ஆக்கிரமிப்பு அரசியலுக்கு எடுத்துக்காட்டு என்றும் திருமதி அனுபமா சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழ்நாடு, குஜராத், உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகிய நான்கு மாநிலங்களில் பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துக்களை, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பெருமளவில் கொள்முதல் செய்வதற்கு மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் ஒப்புதல் அளித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலத்தில் சுமார் **48** ஆயிரத்து **298** மெட்ரிக் டன் பாசிப்பயறு, **97** ஆயிரத்து **970** மெட்ரிக் டன் உளுந்து மற்றும் **41** ஆயிரத்து **718** மெட்ரிக் டன் நிலக்கடலை கொள்முதல் செய்யப்பட உள்ளது.

அதேபோல், குஜராத்தில் கோடைக்கால பருவத்திற்காக 18 ஆயிரத்து 250 மெட்ரிக் டன் பாசிப்பயறு கொள்முதல் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பாசிப்பயறு கொள்முதல் செய்யும் அளவை திரு. சிவராஜ் சிங் சௌஹான் உயர்த்தியுள்ளார். மாநில அரசின் கோரிக்கையை ஏற்று 885 மெட்ரிக் டன்னாக இருந்த கொள்முதல் வரம்பு, தற்போது 990 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் கூடுதலாக 105 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

இந்தியப் பொருளாதாரத்தின் மீது உலகளாவிய முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னாவிஸ் கூறியுள்ளார்.

மும்பை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சை சேர்ந்த இரு தனியார் வங்கிகளுக்கு இடையே மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் முன்னிலையில் நேற்று வங்கிப் பங்களிப்புத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு. ஃபட்னவிஸ், நாட்டின் ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீட்டில் சுமார் 40 சதவீதம் மகாராஷ்டிராவிற்கு வருவதாக கூறினார்.

சம்ருத்தி விரைவுச்சாலை, மும்பையின் உள்கட்டமைப்பு மேம்பாடு, வலுவான போக்குவரத்து வசதிகளுக்கு இந்த முதலீடு பயன்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மகாராஷ்டிராவில் தொடங்கப்பட்ட ஆர்.பி.எல் வங்கி தற்போது சர்வதேச அளவில் விரிவடைந்துள்ளதாகவும் இது இந்தியப் பொருளாதாரத்தின் வலிமையைக் காட்டுவதாகவும் திரு. ஃபட்னவிஸ் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா விளையாட்டுத் துறையில் உலகளாவிய சக்தியாக வேகமாக உருவெடுத்து வருவதாக மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்ஸே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நாளை தொடங்கவுள்ள ஆசிய மூத்தோர் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டிக்கான ஏற்பாடுகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்தப்போட்டி இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிப்பதோடு, உலக அரங்கில் இந்தியாவின் வளர்ந்து வரும் திறனை வெளிப்படுத்துகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பிரம்மாண்டமான சர்வதேசப் போட்டிகள் நமது வீரர்களுக்குச் சிறந்த அனுபவத்தை வழங்குவதோடு, விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க ஊக்கமளிப்பதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான விருப்பமான இடமாக இந்தியா திகழ்வதை இத்தகைய நிகழ்வுகள் உறுதிப்படுத்துவதாகவும், இந்திய வீரர்கள் உலகின் சிறந்த வீரர்களுடன் போட்டியிட புதிய வாய்ப்புகளை இப்போட்டி உருவாக்குவதாகவும் திருமதி ரக்ஷா கட்ஸே தெரிவித்தார்.

<<<<>>>>

அசாம், மேகாலயா, இமயமலையை ஒட்டியுள்ள மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோல் அருணாச்சலப்பிரதேசம், பீகார், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் மிதமானது முதல் கனமழை வரை எதிர்பார்க்கப்படுகிறது.

இமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக், கில்கிட், முசாஃபராபாத் மற்றும் உத்தராகண்ட் ஆகிய பகுதிகளில் இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெல்லி, ஹரியானா, சண்டிகர், பஞ்சாப், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், தெலுங்கானா, மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் ஆகிய இடங்களில் இடியுடன் கூடிய பலத்த காற்று வீச வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

பீகார், ராஜஸ்தான், ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் மத்தியப்பிரதேசத்தின் சில பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம், மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இன்று அனல் காற்று வீசும் நிலை நீடிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம், கொங்கண், கோவா மற்றும் ஒடிசா ஆகிய பகுதிகளில் இன்று அதிக வெப்பத்துடனும், ஈரப்பதத்துடனும் கூடிய வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டி பி பிரிவில் இன்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் கனடா **6-0** என்ற கோல் கணக்கில் கத்தார் அணியை வென்றது.

வான்கூவரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே கனடா ஆதிக்கம் செலுத்தியது.

ஏ பிரிவில் மெக்சிகோ - தென்கொரியா இடையிலான ஆட்டம் தற்போது மேற்கு மெக்சிகோவில் உள்ள **Guadalajara**-வில் நடைபெற்று வருகிறது.

முன்னதாக லாஸ் ஏஞ்சல்சில் பி பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்விட்சர்லாந்து **4-1** என்ற கோல் கணக்கில் போஸ்னியாவை வென்றது.

அட்லாண்டாவில் நேற்றிரவு ஏ பிரிவில் செக் குடியரசு - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

-----------

தெற்காசிய த்ரோபால் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றன.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியா, 2-1 என்ற செட் கணக்கில் இலங்கையை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றது.

மகளிர் பிரிவின் இறுதிப்போட்டியில், இந்தியா 25-23, 25-14 என்ற நேர் செட்களில் பங்களாதேஷை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.

**<<<<The End>>>>**